புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# குறுந்தொகை குறிஞ்சித் திணைக் கவிதைகளில் சிறுபொழுது வருணனை

செய்தலி பாத்திமா.மீ
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை, பல்கலைக் கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

==========================================================================

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்க் கவிதை உலகம் மிக நீண்ட நெடிய பாரம்பரியத்தைத் தன்னுள் கொண்டுள்ளது.தமிழுக்கே ஆன தனித்துவமான கவிதையாக்க மரபுபு அந்தப் பாரம்பரியத்தைக் காலம் கடந்தும் தக்க வைத்துக் கொண்டு வருகின்றது. கவிதை ஆக்கம் என்பது பல்வேறு உத்திகளால் உருவாக்கப்படும் ஒரு சொற்கலையாக்கம் ஆகும். ஒரு கவிதையின் சிறப்பு அல்லது வெற்றி என்பது முழுக்க முழுக்க அதை ஆக்கும் கவிஞனையேச் சாரும்.ஓர் அடியில் அல்லது ஒரு வாக்கியத்தில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு சிறந்த கவிதைகளை ஆக்கி விடுகின்றனர் சிறந்த கவிஞர்கள்.கவிதை பொருளிலும் அதனைச் சொல்லும் விதத்திலும் அதன் உருவாக்கத்திலும் உத்திகள் பலவற்றைக் கையாண்டு அவர்கள் கவிதைகளைச் சிறக்கச்செய்கின்றனர்.கவிதை என்பது உண்மையை அப்படியே கூறுவதாக இருக்காது.கவிஞனின் எண்ணத்திற்கும் உணர்வுக்கும் ஏற்ப பொருள்களையும் செயல்களையும் தேர்வு செய்து எதை எதை இணைத்து எப்படி எல்லாம் கவிதையை உருவாக்க வேண்டுமோ அதன்படி இணைக்கும் வகையில் இணைத்து கவிதையை உருவாக்கம் செய்வான் ஒரு சிறந்த கவிஞன். அதற்கு வருணனை துணைபுரிகின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகைப் பாடல்களில் அமைந்த வருணனைகள் கவிதையாக்கத்துக்கு பயன்பட்டுள்ள விதத்தை அறியவும்,பாடல்களில் அமைந்துள்ள வருணனைகளின் தன்மையை எடுத்துரைப்பதும் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன.

## முன்னுரை

கவிதை இலக்கியம் என்பது பல்வேறு கூறுகளின் இணைவாக ஆக்கப்படும் ஒரு கலை வடிவம். அக்கலை வடிவத்தினை அழகுபடுத்தும் கவிதையாக்கக் கூறாக வருணனை திகழ்கிறது.படைப்பாளன் ஒரு இலக்கியத்தை உருவாக்கும் போது அவ்விலக்கியம் வாசகனைச் சென்றடையப் பயன்படுத்தும் இலக்கிய உத்திகளில் ஒன்றாக வருணனை அமைகிறது. தமிழ் இலக்கியங்களில் வருணனையின் தோற்றுவாய் சங்க இலக்கியக் கவிதைகளிலிருந்து காண முடிகின்றது. சங்க இலக்கியக் கவிதைகள் கொண்டுள்ள பல்வேறு வருணனைக் கூறுகளுள் ஒன்று பொழுது வருணனை. கவிதைப் பாடுபொருளுக்கு அழுத்தம் கொடுக்கும் பாங்கில் புலவர்களால் அவ்வருணனைகள் கட்டமைக்கப்படுகின்றன. முதல் பொருளில் ஒன்றான பொழுது பாடல் பொருளுக்கு ஏற்றப் பின்னணியாக அமைவதில் சிறப்பிடம் பெறுகிறது.சலனமற்று நிற்கும் நிலத்தைவிடச் சஞ்சலித்துக் கொண்டிருக்கும் பொழுது உணர்வுகளைத் தூண்டும் வல்லமை பெற்றது.அதனைப் புரிந்து கொண்ட சங்கப் புலவர்கள் தங்கள் புனைவுகளுக்குத் தகுந்த காட்சி அமைப்பை உருவாக்க இருபொழுதுக் கூறுகளையும் கவிதைகளில் சீரியமுறையில்பயன்படுத்திக்கொண்டனர்.

இக்கட்டுரை குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள குறிஞ்சித் திணைக்கவிதைகளில் சிறுபொழுது வருணனை செய்யப்பட்டுள்ள திறம் குறித்து ஆராய்கிறது.

குறுந்தொகையில் சிறுபொழுது வருணனை

யாமப்பொழுதைக் குறிஞ்சிக்குரிய சிறுபொழுதாக தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. யாமம் என்பதற்கு, "இராத்திரி, சாமம்,மாலைப்பொழுதின் பின் பத்து நாழிகை" என்று பல பொருள்கள் யாழ்ப்பாண அகராதியில் கொடுக்கப்பட்டுள்ளன. உலகம் எல்லாம் அடங்கி அமைதியாக இருக்கும் நள்ளிரவே யாமம் ஆகும்."களவொழுக்கத்தில் உள்ள காதலர்கள் ஒருவரையொருவர் அளவளாவதற்கு ஏற்றதாகப் புலனெறி வழக்கு குறிக்கும் சிறு பொழுது நள்ளிரவேயாகும். அதிலும் மழைக்கால நள்ளிரவு களவொழுக்கக் காதலரின் சந்திப்புக்கு உரிய சிறப்புடையதாகும். கார்கால மழையும் இடியும் மின்னலும் நிறைந்த நள்ளிரவுக் காட்சிகளோடு இரவினையும் இணைத்து வருணிப்பது இலக்கியம் காட்டிய வழியாகும்" என்பதிலிருந்து இரவுப்பொழுது ஆக்கப்படும் சூழல் புலனாகிறது.

குறுந்தொகையில் குறிஞ்சித் திணைக்கவிதைகளில் சிறுபொழுதாகிய யாமப்பொழுது பற்றிய குறிப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. யாமம் சில மலர்கள் மலரும் காலமாகவும், இருள் நிறைந்த மழை செறிந்த பொழுதாகவும துயில் நிறைந்தும் துயில் நீங்கியதுமான செயல்களைக் கொண்ட காலமாகக் காட்டப்படுகின்றன. அந்த அடிப்படையில் குறுந்தொகை குறிஞ்சித் திணை பாடல்களில் சிறுபொழுது வருணனை பின்வரும் தலைப்பின் கீழ் ஆராயப்பட்டுள்ளன.அவை

1.இரவு செறிதல்

2.ஊர் துயில் கொள்ளுதல்

3.அஞ்சத் தக்க இரவு

4.நிலவு தோன்றுதல்

5.மழை பொழிதல்

6. வாடை வீசுதல்

7.இன்பமாக இருத்தல்

8. துன்ப நிலை

9.விலங்கின் செயல்

10.பறவைகளின் செயல்

11.மக்கள் செயல்

என்பனவாகப் பகுத்தாரயப்பட்டுள்ளன.

1.இரவு செறிதல்

யாமப்பொழுது என்பதே இரவு செறிந்து காணப்படும் பொழுதாக இருக்கும். இடையிரவு செறிந்த இருளை உடைய இரவாக இருப்பதை 'நள்ளென்றன்றே யாமம்' என்ற தொடர் சுட்டுகின்றது. நள் என்றால் இரவு, நடு, உச்சிப்பொழுது என்னும் பொருள் பெறுகிறது. இரவு செறிந்த காரணத்தாலே வெளிச்செல்லுவதற்கு அரியதாகவும் இருக்கின்ற தன்மை காட்டப்பட்டுள்ளது. இதனை,

"அஞ்சும னளித்தே னெஞ்ச மினியே

ஆரிருட் கங்கு லவர் வயிற்

சாரனிளிடைச் செலவானாதே" (குறுந்-153)

எனும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

*2.ஊர் துயில் கொள்ளுதல்*

*இரவுப்பொழுது ஊர் மக்கள் அனைவரும் தூக்கத்தில் ஆழ்ந்து கொள்ள தலைவி மட்டும் வருந்தி இருக்கும் இரவாக பாடலில் பயின்றுவரக் காணலாம். இந்த பின்னணியில் மூன்று பாடல்கள் வருணிக்கப்பட்டுள்ளன. ஊரார் தூங்கும் யாமப்பொழுது நொச்சியின் மலர்கள் வீசும் ஓசையைக் கூட கேட்கும் அளவிற்கு, மிகுந்த அமைதி நிலவியிருந்தமையை புலவரால் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. இன்னுமொரு புனைவில் 'பல்லோர் துஞ்சும் யாமம்' என்றே சுட்டப்பட்டும் இருக்கின்றது. பலரும் உறங்கும் நள்ளிரவுப் பொழுது என்பதை,*

*"எல்லைச்சேரலின், இருள்பெரிது பட்டன்று*
*பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்" (குறுந்-355)*

*என்று குறுந்தொகை விளக்குகின்றது.*

*3.அஞ்சத்தக்க இரவு*

*இரவுப்பொழுது அஞ்சத்தக்க பல செயல்கள் நிகழும். இதனைக் கூறி இரவுக்குறி மறுக்கும் செயலும் நடைபெறும். தலைவன் தலைவியைச் சந்திக்க முயலும் இரவு நேரத்தில் நிகழும் காட்சியாக, பெரிய ஆண்யானை பலம் பொருந்திய புலியை எதிர்த்துப் போராடி சோர்வடையும் நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னொரு பாடலில், யானையின் தாக்குதலுக்கு ஆட்பட்ட புலியானது செந்நாயைப் பிடிப்பதற்கு தக்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கும் இருளையுடைய நடுயாமம் வருணிக்கப்பட்டுள்ளது. இதனை,*

*"நெடுங்கை வன்மான் கரும்பை யுழந்த*
*குறுங்கை யிரும்புலிக் கோள்வ வேற்றை*
*பைங்கட் செந்நாய் பகுபதம் பார்க்கும்*
*ஆர் இருள் நடுநாள் வருதி" (குறுந்-141)*

*என்னும் அடிகள் உணர்த்துகிறது. காட்டுமானை கொன்றுவிட்டு பயங்கரமாக ஒலியெழுப்பும் நள்ளிரவுப் பொழுதும் பாடலில் பயின்று வந்துள்ளது.*

*4.நிலவு தோன்றுதல்*

*இரவில் நிலவு தோன்றுதல் இயல்பான செயல் ஆகும். நிலவின் ஒளியானது களவிற்கு எற்றது அல்ல. இரவுக் குறியில் தலைவியுடன் இன்பம் கொள்ள எண்ணி தலைவன் இரவின் துன்பங்களைக் கடந்து வருகிறான். எனினும் அதைக் காட்டிலும் நிலவின் ஒளி இடையூறாக அமைவதைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகிறது.*

*"எல்லி வருநர் களவிற்கு*

*நல்லை அல்லை நெடுவெண்ணிலவே " (குறுந்-47)*

*5.மழைபொழிதல்*

*தலைவியின் துன்பமிகுதிக்கு ஆக்கம் கூட்டுவதாக மழைபொழியும் காட்சியும் அமைகிறது. பெரிய மழை பெய்ததால் நீர்க்பெருக்கெடுத்து அருவியெல்லாம் நிறைந்து அடுத்த நாளிலும் மலைப்பகுதியில் ஒலிக்கும் நடு இரவு குறித்த வருணனையை கபிலர் பாடலில் காண முடிகின்றது. மழைவிடாது பெய்த காரணத்தால் வானத்தை மறைத்து மழைநீர் எங்கும் பெருகி நிலத்தை மறுத்து, சூரியன் மறைந்ததால் இருள் அதிகமாகி காணும் நள்ளிரவும் கபிலர் இன்னொரு பாடலில் சுட்டியுள்ளார்.சூரியன் ஒளியின்றி அடங்க போய்கள் கண் சிமிட்டி நடுங்கும்படி இரவுப் பொழுதில் மழை ஒழியாமல் பெய்துகொண்ட காட்சி நக்கீரனாரின் பாடலிலும் இடம் பெற்றுள்ளது.*

*6.வாடை வீசுதல்*

*இயற்கையின் ஒவ்வொரு அசைவுகளும் சேர்ந்திருப்பவர்களுக்கு இன்பத்தையும் பிரிந்திருப்பவர்களுக்கு துன்பத்தையும் கொடுக்கும். அவர்கள் துன்பத்தை மிகுவிப்பன போல் தோன்றும் யாமப்பொழுதில் புணர்தல் ஒழுக்கத்துக்கு இடையூறாக பல்வேறு நிலைகளில் இயற்கைச் சூழல் குறிப்பிடுவதைக் காணலாம். அவற்றுள் வாடைக்காற்றின் தன்மையும் பேசப்படுகிறது. சிவந்த தலையை உடைய ஆண் அன்றில் தன் பெண் அன்றிலோடு தடா மரத்தில்*

இருந்து ஒலிக்கின்ற இரவுப்பொழுதில் வீவீசும் வாடைக்காற்றானது தலைவிக்கு வருத்த மிகுதியை புலப்படுத்துகிறது.
இதனை,

"கையற நரலும், நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழி, நம் காதலர் வரவே" (குறு-160)

என்ற பாடல் அடிகள் விளக்குகிறது.

7.இன்பமாக இருத்தல்

இரவிலே தலைவனும், தலைவியும் சந்திப்பதற்குக் குறிக்கப்படும் இடம் இரவுக்குறி எனப்படும். இரவுக்காலத்தில் களவுப் புணர்ச்சிக்கு சந்திக்க குறிக்கப்படும் இடம் என்றும் பொருள் கொள்ளலாம். இரவுக்குறி நேர்ந்து தலைவனோடு ஒத்து தலைவி இருக்கும் விரிந்த இருளையுடைய இரவு கபிலரின் வருணனையாக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

8.துன்ப நிலை

யாமப்பொழுது தலைவிக்கு துன்பம் மிகும் பொழுதாகவே இருக்கிறது. தலைவனைக் காணாத கண்கள் தூக்கமின்மையோடு வருந்துகிறது. தாயின் அரவணைப்பில் நல்ல பஞ்சாலாகிய படுக்கையில் கண்ணிமை பொருந்தாமல் துயிலும் இரவுப்பொழுது பாடலில் பயின்று வந்துள்ளது. இதனை,

" நிரையிதழ் பொருந்தாக் கண்ணோடு இரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவிழ் சிறுபுறந் தழீஇ
அன்னை முயங்கத் துயிலின் னாதே" (குறுந்-353)

என்னும் பாடல் வரிகள் சுட்டுகின்றது. தலைவன் தாழிட்ட கதவைத் திறகக முயலும் இரவுக்காலம் 'உரவுக்களிறு போல் வந்திரவுக் கதவமுயறல்' (குறுந்-244)என்ற தொடர் குறிப்பிடுகின்றது.

9.விலங்கின் செயல்

இரவுப்பொழுதில் உயிரினங்கள் அனைத்தும் செயலற்று இருந்தாலும் இரவு உணவுக்காகவும், இயல்பாகவும் நகரும் உயிரினங்களின் செயல்களை யாமப்பொழுதின் நிகழ்வுகளாகக் காட்டப்பட்டுள்ளன. யாமப்பொழுதில் விலங்குகளின் செயல்கள் மூலம் கேட்கும் ஓசைகள் தனிமைத்துயரில் வாடும் தலைவிக்கு ஏக்கத்தைத் தருவதாகப் புலவர்கள் காட்டியுள்ளனர். இதனை,

"திரிமருப் பெருமை யிருணிற மையான்
வருமிட றியாத்த பருவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியங்குதொ றிசைக்கும்
இது பொழுதாகவும் வாரார்" (குறுந்-279)

என்ற பாடலடிகளில் விளக்குவதன் வாயிலாக எருமை நடக்குந்தோறும் அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணியின் ஓசை கேட்கும் தனிமையைக் கொண்ட நள்ளிரவு வருணனையாக்கப்பட்டுள்ளது. மழையினால் சேற்றில் நிற்பதை வெறுத்த எருமை அச்சம் கொடுக்கும் வண்ணம் உரத்த குரலில் ஐயென்று ஒலிக்கும் இரவுக் காட்சியும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

10. பறவைகளின் செயல்

இரவுப்பொழுது தலைவியின் துன்பம் மிகும் பொழுதாக உள்ளது. தலைவனின் வருகையை எதிர்ப்பார்த்திருக்கும் தலைவிக்கு யாமப்பொழுதின் ஓசைகள் தலைவனை நினைநினைவூட்டுவதாகவே அமைகிறது. தலைவன் தேரில் வரும் ஓசையை எண்ணிக்கொண்டு தூக்கத்தை மறந்து உறங்காமல் வாழும் தலைவிக்கு பாதி இரவில் அன்றில் பறவை தம் துணையை அழைக்கும் ஒலியானது வருத்த மிகுதியை அளிக்கிறது.

*11. மக்கள் செயல்*

*தினைப்புனம் காக்கும் மக்கள் விலங்குகளை விரட்ட யாமப்பொழுதில் இசை முழக்கம் செய்வதுண்டு. ஆசிரியர் பெயர் தெரியாத குறுந்தொகை பாடலொன்றில் யாமக்காவலர்கள் விலங்குகளை விரட்ட வேண்டி தொண்டகப்பறை முழக்கும் பாதி இரவு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை,*

*"சிறுதிணை விளைந்த வியன் கணிரும்புனத்*
*திரவரி வாரிற் தொண்டகச் சிறுபறை*
*பானாள் யாமத்துங் கறங்கும்"   (குறுந்-375)*

*என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.*

*முடிவுரை*

*குறிஞ்சிக்குரிய சிறுபொழுதாகிய இரவு பற்றிய வருணனைகள் கூதிர்க்காலப் பின்னணியில் புனையப்பட்டுள்ளன. இரவு பற்றிய சூழலில் நள்ளிரவான யாமமே பெரிதும் குறிஞ்சித் திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. காதல் வயப்பட்ட தலைமகனும், தலைமகளும் கண்டு மகிழத்தக்க பொழுதாகக் குறிக்கப்பெறுவது நள்ளிரவேயாகும். இரவுக் காலங்களில் இடையறாது பொழியும் மழையும் மழைக்கு அறிகுறியாக வரும் இடியும் மின்னலும் நிறைந்த காட்சிகள் புலவர்களால் அழகுபட குறிப்பிடப்பட்டுள்ளன. குறுந்தொகை குறிஞ்சித்திணைப்பாடல்களில் இடம்பெற்றுள்ள பொழுது வருணனைகள் அக மாந்தர்களில் குறிப்பாக தலைவியின் வருத்தமிகுதியை காட்டுவதாகவே அமைந்துள்ளன.*

*துணைநின்ற நூல்கள்:-*

*1.குறுந்தொகை மூலமும் உரையும்- உ.வே.சாமிநாதையர்*

*2.சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்- அம்மன்கிளி முருகதாஸ்*

*3.தமிழ் அழகியல்- திசு நடராசன்*

*4.நில அமைப்பும் தமிழ்க் கவிதையும் - தனிநாயக அடிகள்*

********* ********* ********** ********* ********* ********** ********** **********